

சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் கொடிகாத்த குமரன் அவர்களின் 122 வது பிறந்த நாளை முன்னிட்டு தாராபுரம் தேர்தல் பணிமனையில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா ஆகியோர் திருப்பூர் குமரனின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்டக் கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணற்றில் முன்னாள் அமைச்சர் வே.தங்க பாண்டியன் அவர்களின் துணைவியார் விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்கம் தென்னரசுவின் தாயார் ராஜா மணி அம்மாள் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

மதுராந்தகம் – தாராபுரம் தொகுதி

இடைத்தேர்தலில் இன்று வாக்குப்பதிவு!

சென்னை, அக். 6 -

மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத் தேர்தலில் இன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய இரு சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் த.வெ.க.வின் குதிரை பேரத்தால் அத் தொகுதி மக்கள் மீது இடைத்தேர்தல் திணிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு தொகுதிகளிலும் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க., இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் போட்டியிடுகின்றன. தி.மு.க. சார்பில் மதுராந்தகத்தில் இ.பரந்தாமனும்,

தாராபுரத்தில் எஸ். சுகன்யாவும் போட்டியிடுகின்றனர்.

இரண்டு தொகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் நிறைவடைந்தது.

இந்நிலையில், இந்த இரண்டு தொகுதிகளிலும் இன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது. வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

ஓட்டுப்பதிவு முடிந்ததும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வைக்கப் படும். வருகிற 9ம் தேதி வாக்குகள் எண்ணப் பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

இடைத்தேர்தலை யொட்டி 2 தொகுதிகள் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

தட்டாஞ்சாவடி தொகுதி!

இதேபோல், புதுச்சேரி மாநிலம் தட்டாஞ்சாவடி தொகுதியிலும் இன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது.

வாக்கு எண்ணிக்கை 9ஆம் தேதி நடைபெற உள்ளது.

தங்கள் ஆட்சியில் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு குரல் கொடுக்காத போது

பெண் உரிமை பற்றிப் பேச உங்களுக்கு தகுதி உண்டா முதல்வரே?

சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, அக். 6-

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:-

முதலமைச்சர் விஜய்யின் மதுராந்தகம் ரோடு ஷோ பிளாப், நம் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாராபுரம் கூட்டம் டாப் என்று சமூக வலை தளங்களில் நிரம்பிக் கிடக்கும் செய்திகளை பார்த்து மனம் நொந்து போன விஜய் பெண்ணை உருவ கேலி செய்வதாக தலைவர் மீது அவதூறு பரப்பி நீலிக் கண்ணீர் வடிக்கும் விஜய் அவர்களே! சொத்தில் பெண்களுக்கு சம உரிமை தந்த கலைஞர் அவர்கள் வழியில் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை பெண்களுக்காக தந்த தளபதி மு.க.ஸ்டாலினை பற்றி விமர்சிப்பதற்கு 30 ஆண்டுகள் திரைப்படங்களில் பெண்களை "போகப்" பொருளாக சித்தரித்து இரட்டை அர்த்த வசனம் பேசி ஆபாச அங்க அசைவுடன் நடனமாடி ஒரு தலைமுறை இளைஞர் களையே சீரழித்த உங்களுக்கு பெண் உரிமைபற்றி பேச தகுதி உண்டா CMsir?



சட்டப்பேரவையிலும் பொது மேடைகளிலும் மூத்த தலைவர்களை உருவக்கேலி செய்வதையே வாடிக்கையாக கொண்டிருக்கும் நீங்கள் மற்றவர்களை நோக்கி விரல் நீட்டுவதற்கு என்ன தகுதி இருக்கிறது CMsir?

ஆட்சிக்கு வந்த பிறகு பெருகிவரும் பாலியல் வன்கொடுமை பற்றி வாய் பேசாத நீங்கள், கட்டிய மனைவியை லட்சக் கணக்கான ரசிகர்கள் நாகூசும் வார்த்தைகளால் அர்ச்சித்த போது அதற்கு "Worth இல்லை" என்று பொதுவெளியில் சொன்ன நீங்கள் இப்போது பொங்கி எழுவது சாத்தான் வேதம் ஓதுவது போல் இல்லையா CM sir?

டிபன் பாக்ஸில் 5000 ரூபாய் வாக்காளர்களுக்கு கொடுத்தும் தாராபுரம், மதுராந்தகத்தில் த.வெ.க.வுக்கு தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்து நீங்கள் அரசின் திட்டங்களுக்காக மக்களிடமிருந்து பெற்றிருந்த செல்போன் எண்கள் மூலம் பணப்பட்டுவாடா (ஜிபே) செய்வதை மறைக்க நீங்கள் நடத்தும் நாடகம் பலிக்காது CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கழுதி அருகே

மின்கசிவில் சிக்கி இரண்டு குழந்தைகள் உயிரிழப்பு!

கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. இரங்கல்!

சென்னை, அக். 6 -

கழுதி அருகே அரசு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட மின்கசிவில் சிக்கி இரண்டு குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் வேதனையளிப்பதாக, தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ராமநாதபுரம் மாவட்டம் கழுதி அருகே அச்சங்குளம் அரசு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட மின்கசிவில் சிக்கி 11 வயதான நிறைமதி மற்றும் 6 வயதான பால பிரவீன் இருவரும் உயிரிழந்த சம்பவம் மிகுந்த வேதனையளிக்கிறது.

தனது இரண்டு பிள்ளைகளையும் இழந்து தவிக்கும் பெற்றோரின் வலியை வார்த்தைகளால் விவரிக்க இயலாது என்று கூறியுள்ளார்.

மின்கசிவு குறித்து ஏற்கெனவே புகார் அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்காத அரசு அலுவலர்களின் அலட்சியம் குறித்து உரிய விசாரணை நடத்தி, தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதோடு, அக்குடும்பத்திற்கு உரிய நீதி கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலை கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட எதிர்ப்பு!

மீனவர்கள் கருப்புக்கொடி போராட்டம்!

வீடு, கடை, படகுகளில் ஊர்வலம்!

சென்னை, அக். 6 -

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக மீனவர்கள் நேற்று கருப்புக் கொடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது வீடு, கடை, படகுகளில் கருப்பு கொடி ஏற்றி ஊர்வலமாகச் சென்றனர்.

சென்னை, பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டப்படும் என த.வெ.க. அரசு அரசாணை வெளியிட்டது. இதற்கு தி.மு.க., அ.தி.மு.க., இடதுசாரிகள், மீனவ கிராம மக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

பல்வேறு மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த வாரம் பட்டினப்பாக்கத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம், முள்ளிக் குப்பம் வரையுள்ள 10 கிராமங்களின் மக்கள் வீடுகளிலும் கடற்கரை மணல் பரப்புகளிலும், மீனவர்களின் படகுகளிலும் கருப்புக் கொடி கட்டியும், பட்டினப்பாக்கம் பவானி குப்பத்தில் உள்ள மீன் கடைகளில் கருப்பு கொடி ஏற்றியும், கருப்புக் கொடி ஏந்தி ஊர்வலமாகச் சென்றும் போராட்டத்தில் ஈடுபட்டு தங்களின் எதிர்ப்பை தெரிவித்தனர்.

புதிய தலைமைச் செயலகம் கட்டும் முடிவுக்கு எதிராகவும் மீனவ மக்களுக்குச் சொந்தமான பூர்வீக நிலத்தை திருப்பிக் கொடுக்க வலியுறுத்தியும் தமிழ்நாடு அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். புதிய தலைமைச் செயலகத்திற்கான அரசாணையை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்; மறுவாழ்விற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தை முள்ளிக்குப்பம், முள்ளிமாநகர் மீனவ மக்களுக்கான நிலமாக உறுதி செய்ய வேண்டும்; இப்பகுதியை மீனவர்களுக்கான நீண்டகால குடியிருப்புப் பகுதியாகப் பதிவு செய்ய வேண்டும்

பாதிக்கப்படும் கிராம மக்களுடன் அரசு அதிகாரிகள் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இப்பகுதி தொடர்பான எந்த முடிவும் எடுக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

அப்போது நிருபர்களைச் சந்தித்த புதிய தலைமைச் செயலக எதிர்ப்பு போராட்டக் குழுவின் நிர்வாகிகள் கூறியதாவது: -

தமிழ்நாடு அரசின் அரசாணையை எதிர்த்து நாங்கள் வழக்கு தொடர்ந்து உள்ளோம். புதிய தலைமை செயலகம் கட்டினால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

வஞ்சனை இல்லாமல் மீனவ மக்களின் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும்.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து கலந்து கொண்டு கடந்த வாரம் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். ஆனால் இதுவரை அரசு அதிகாரிகள் ஒருவர் கூட பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. இங்கு ஒரு நாள் மீனவர்கள் மீன் கடை போடவில்லை என்றால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும். சூழ்நிலை இவ்வாறு இருக்க புதிய தலைமைச் செயலகம் இங்கு அமைத்தால் அவர்களின் வாழ்வாதாரம் என்னவாகும் என முதலமைச்சர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாங்கள் எந்தக் கட்சிக்கும் ஆதரவானவர்களும் இல்லை, எந்த கட்சிக்கும் எதிரானவர்களும் இல்லை. எங்களோட கோரிக்கை இதுவரைக்கும் முதல்வர் கவனத்திற்குப் போயுள்ளதா என்ற கேள்வி உள்ளது. முதல்வர் இடைத் தேர்தலில் வேலை செய்து கொண்டு இருக்கிறார். அதனால் வந்து எங்களின் கோரிக்கைகள் குறித்து அமைச்சர்கள்தான் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

சில நாள்களுக்கு முன்னர் பள்ளி கல்வித்துறை அமைச்சர், இது மீனவர்களுக்கான இடம்தான், ஆனால் இந்த இடத்தில் பழைய பில்டிங் உள்ளது. அந்த பில்டிங்கில் மீனவர்களையே அச்சுறுத்துகிற வகையில் பல தகாத செயல்கள் நடக்கிறது எனவும் அதனால்தான் நாங்கள் இந்த இடத்தில் தலைமைச் செயலகம் கட்டுகிறோம் எனக் கூறுகிறார். அந்த இடம் இருட்டாக உள்ளது என்றால் அங்கு மின்விளக்கு அமைத்து வெளிச்சம் கொடுக்கலாம்.

அந்த பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு மீனவர்களுக்குக் கொடுக்கவேண்டுமே தவிர, அதைச் செய்யாமல், தலைமைச் செயலகம் கட்டுவார்களா என்பதுதான் எங்களின் கேள்வி. தலைமைச் செயலகமா மீனவர்களின் வாழ்வாதரமா என்று கேட்டால் முதல்வருக்கு மீனவர்கள்தான் முக்கியம் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா முதலில் கூறினார். அடுத்த நாளே அந்த இடம் காலியாகத்தான் உள்ளது, 1200 மீனவக் குடும்பங்கள் அங்கு இல்லை எனக் கூறுகிறார். அவரின் கருத்துக்கள் முரணாக உள்ளது. அவர் களத்தில் வந்து பார்த்தால் தான்தெரியும். வீட்டிலோ கோட்டையிலோ உட்கார்ந்துகொண்டு பார்த்தால் தெரியாது.

இந்த பகுதி மக்களுக்கு என்ன பிரச்சினை உள்ளது என இங்கு வந்து பார்த்தால்தான் அவருக்கு தெரியும். அதை விட்டுட்டு அரசு அதிகாரிகளும், அமைச்சர்களும் தன்னிச்சையாக ஒவ்வொரு நாளும் பேட்டி கொடுப்பதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தாராபுரத்தில் த.வெ.க. அதிகார துஷ்பிரயோகம்!

சுப்பராயன் எம்.பி. குற்றச்சாட்டு!

சென்னை, அக். 6 -

தாராபுரம் ஜனநாயகத்தை துகில்உரியும் களமாகி விட்டதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பராயன் குற்றம்சாட்டியுள்ளார்.

சுப்பராயன் எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



தாராபுரம் அதிகார ஆட்டம் எல்லை மீறி விட்டதாகவும், ஜனநாயகத்தை துகில்உரியும் களமாகி விட்டதாகவும், காவல்துறையின் கலோனியல் தடிகள் மிரட்டுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெளியூர் படைகளை வேன்களில் கொண்டு வந்து த.வெ.க.வினர் இறக்கியதாகவும் சுப்பராயன் எம்.பி. விமர்சித்துள்ளார்.

அதிகாரம் என்பது ஜனநாயகத்தைக் காப்பாற்றவா? காவு கொள்ளவா? ஜனநாயகம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இடம் தேடி அலைகிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி. சுப்பராயன் விமர்சித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி தெருவுக்கு சாலமன் பாப்பையா பெயர்!

தி.மு.க. குரலுக்கு செவிசாய்த்த மாநகராட்சி!

மதுரை, அக். 6 -

மதுரை மாநகராட்சியில் உள்ள தெருவுக்கு சாலமன் பாப்பையா பெயர் வைப்பதற்கு தி.மு.க.வினர் கொண்டுவந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

மதுரை அரசரடி ஞான ஒளிவுபுரத்தைச் சேர்ந்த மில் தொழிலாளி சுந்தரத்தின் மகனாக 1936ம் ஆண்டு பிப். 22ம் தேதி பிறந்தவர் சாலமன் பாப்பையா.

இவர், உடல்நலக் குறைவால் தனது 90வது வயதில் கடந்த செப்.11ம் தேதி காலமானார்.

இவரின் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

இவர், பேராசிரியராக. மேடை பேச்சுகள், பட்டிமன்றங்கள் மூலமாக தமிழ் மொழிக்கும், இலக்கியத்துக்கும், சமூகத்துக்கும் ஆற்றிய சேவை அளப்பரியது.

அவரது நினைவை போற்றும் வகையில், அவர் வாழ்ந்த தெருவுக்கு, அவரது பெயரை வைக்க வேண்டும் என ஏற்கெனவே மாநகராட்சி கூட்டத்தில் தி.மு.க. மாமன்ற குழுத் தலைவர் ஜெயராம் தெரிவித்தார்.

இந்நிலையில், நடைபெற்ற கூட்டத்திலும் மீண்டும் அவர் அந்த தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இதையடுத்து இந்த தீர்மானம் எதிர்ப்பின்றி ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

இதனைத் தொடர்ந்து, அவர் வசித்த தெருவுக்கு சாலமன் பாப்பையா பெயர் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.